**சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் 3 - (கட்டம் II) – 2017**

---

சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் 3 - (கட்டம் II) இன் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீனா அபிவிருத்தி வங்கி (சீடிபீ) கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 24 ஆந் திகதிய 4510201401100000587 ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. முக்கிய நுழைவுகளை வழங்குகின்ற ஏற்கனவெயுள்ள தேசிய வீதிகள் மற்றும் கிராமிய வீதிகளை மீள்நிர்மாணித்தல் / புனரமைத்தல் மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு தரத்தால் அளவிடுதல் மற்றும் முன்னேற்றப்பட்ட நுழைவு கிடைக்கக்கூடிய சேவைகள் பகுதியில் வசிக்கின்ற மக்களிற்கான சமூக பொருளாதார நன்மைகளின் எண்ணிக்கையை வழங்குதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 15,594.14 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 117.66 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,253 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 100 மில்லியன் சீனா அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட

கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளுத

.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீகரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும்வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின்மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன்வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள்மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

செயற்திட்டத்தின் தள அலுவலகங்கள் மற்றும் ஆய்வுகூடங்களில் தொடர்ந்தும் காணப்படும் சொத்துக்கள் மீது நிதிப்பிரமாணம் 756 ஆம் இலக்கத்தினால் வேண்டப்பட்டவாறு, அவ்வாறான சொத்துக்களின் உள்ள தன்மையை மெய்மையாய்வுசெய்ய இயலக்கூடியவாறு மீளாய்வாண்டிற்கான அளவைச்சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின்போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையிலான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒடுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
| | யூஎஸ். டொலர் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| நிதியளிப்பு முகவர் | 100.00 | 13,253.00 | 5,900.00 | 4,917.09 | 7,111.06 |
| இலங்கை அரசாங்கம் | 17.66 | 2,341.14 | 1,300.00 | 1,074.00 | 1,445.30 |
| | **117.66** | **15,594.14** | **7,200.00** | **5,991.09** | **8,556.36** |

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்ட காலப்பகுதியின் போது, 20 தேசிய வீதிகளின் 128.85 கிலோமீற்றர்களினை புனரமைப்பதற்கு திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், அந்தத் திகதியில் உள்ளவாறு அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 80.60 சதவீத

இலக்கிற்கு எதிராக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 47.10 சதவீதத்திலிருந்து 77 சதவீதம் வரையான வீச்சல் பௌதீக செயன்முன்னேற்றம் அடையப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கனியச்சிட்டையில் மேற்கொள்ளப்பட்ட இடைக்கால தொகைகள் மற்றும் எதிர்பாராததவைகளுக்கான ஒதுக்கீடுகள், அரச பெறுகைகள் வழிகாட்டல்களின் 5.4.4(1) ஆம் பந்திக்கு முரணாக ஒப்பங்களுக்கான நகர்வு முற்பணத்தின் கணிப்பீட்டிற்கு செயற்திட்டத்தினால் கருத்திற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்விளைவால், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒப்பந்ததாரர்களுக்கு அதன்மீது ரூபா 757 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மத்திய மாகாணத்திலுள்ள மீதாவல - ஹெதியான வீதி மற்றும் புஸல்லாகம - உள்பொத வீதியின் நிர்மாண வேலைகள் அசல் நோக்கெல்லையின் வேலைகளில் தொடர்புடைய வீதிகளின் நிர்மாண வேலைகள் உள்ளடக்கப்பட்டுக் காணப்படாதிருந்தபோதிலும், மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்வேறு கட்டளைகளின் கீழ் முறையே ரூபா 295 மில்லியன் மற்றும் ரூபா 172.2 மில்லியன் தொகைகள் செலவிடப்பட்டிருந்தது. மேலும், மேற்குறிப்பிடப்பட்ட வேலைகளின் நோக்கெல்லையின் வேறுபாடுகளுக்கு தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 245 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் மேற்கொள்வதற்கு செயற்திட்டத்தின் மூல வேலைத்திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட மத்திய மாகாணத்தின் கண்டியிலுள்ள ராஜபீல்ல மாவத்தையின் 1.75 கிலோமீற்றர் புனர்நிர்மாண வேலைகள் அதனைத்தொடர்ந்து கைவிடப்பட்டிருந்ததுடன் அந்த புனர்நிர்மாண வேலைகளுக்குப் பதிலாக மத்திய மாகாணத்தின் கண்டியிலுள்ள ஏ.எஸ்.பீ ஹமீட் மாவத்தியின் ஒரு கிலோமீற்றர் வீதி ரூபா 245 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) நாவலப்பிட்டி தொடக்கம் நகஸ்வெல்ல வரையான 11 கிலோமீற்றர் நீளத்துடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீதியின் பயனாளிகள் அடுத்திருந்த யட்டியாந்தோட்ட நகரத்திற்கு இணைக்கப்பட்டிராது நகஸ்வெல்ல பாலம் வரை மாத்திரம் வீதியின் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்து காணப்பட்டமையினால் முதலீட்டின் அதிஉத்தம பலன்களினை அறுவடைசெய்ய முடியாதிருந்தது. வீதி நிர்மாண வேலைகளினை துண்டித்தலுக்கான காரணங்கள் கணக்காய்விற்கு விபரிக்கப்படவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திடடத்தின் கீழ் வீதிகளின் புனரமைப்பிற்கு கனியச்சிட்டையில் உள்ளடக்கப்பட்ட விகிதங்கள் பிரதேசத்தில் ஏனைய நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களினால் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு சேவைகளுக்கு பிரயோகிக்கப்பட்ட விகிதங்களுடன் ஒப்பிடும்பொழுது உயர்வாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மத்திய மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட வீதிப் புனரமைப்பு வேலைகளுக்கு கனியச்சிட்டையில் பிரயோகித்த மரங்களினை அகற்றுவதற்கான விகிதங்கள் அலகுக்கு ரூபா 13,500 தொடக்கம் ரூபா 40,000 வரை தொடர்ந்தும் காணப்பட்ட அதேவேளை, மத்திய மாகாணத்திலுள்ள பேராதெனிய - பதுள்ள - செங்கலடி வீதியில் ஏனைய நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட சமமான புனரமைப்பு வேவைகளுக்கு பிரயோகித்த

விகிதங்களின் வீச்செல்லை அலகுக்கு ரூபா 5,660 தொடக்கம் ரூபா 15,470 வரை காணப்பட்டது. வீதிப்பாதுகாப்பின் கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம் மற்றும் வீதிகள் சம்பந்தப்பட்ட போக்குவரத்து தற்கால பிரிவினை அமைத்தல் நோக்கத்திற்கு ரூபா 592,780 தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த அதேவேளை பேராதெனிய - பதுள்ள - செங்கலடி வீதிப் பிரிவின் சமமான வேலைகளுக்கு ரூபா 207,297 தொகையொன்று மாத்திரம் ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2018 ஏப்ரல் 04 இல் கடுகஸ்தோட்டை - மெதவலயின் 6+950 கிலோமீற்றர் வீதியில் கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட களப்பரீட்சிப்பில் எடுக்கப்பட்ட மையபாக (Core) மாதிரி, 50 மில்லிமீற்றர் நியமத்தடிப்பத்திற்கு முரணாக, 37.5 மில்லிமீற்றர் சராசரி தடிப்பமொன்றில் தொடர்ந்தும் காணப்பட்டது. ஆகையினால், வேலைகளின் தரத்தினை உறுதிப்படுத்துவதன்மீதான கட்டுப்பாடுகள் மற்றும் புனர்நிர்மாணிக்கப்பட்ட வீதிப் பிரிவின் வீதியின் மதிப்பு கணக்காய்வில் ஐயத்திற்குரியதாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

(இ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை 2017 யூலையிலிருந்து ரூபா 65,000 மாதாந்த ஊதியமொன்றுக்கு சமூக மற்றும் சுற்றுச்சூழலியல் இணக்கப்பாடு மற்றும் செயற்திட்டத்தின் காணிக்கொள்வனவு வேலை நோக்கங்களுக்கு 03 ஆலோசகர்களினை நியமதித்திருந்தது. எவ்வாறாயினும், காணிக் கொள்வனவு வேலைகள் மீளாய்வாண்டின்போது செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒப்பந்த உடன்படிக்கையின் பொது நிபந்தனைகளின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம், செயலாற்றல் முறியின் கிரயம் அவரது சொந்தக் கிரயத்தில் ஒப்பந்தகாரரினால் தாங்கிக்கொள்ளப்படல்வேண்டும். எவ்வாறாயினும், 20 தேசிய வீதிகளின் புனர்நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரர்களுக்கு செயலாற்றல் முறியின் கிரயமாக கடன் வருமானத்தில், மீளாய்வாண்டின்போது செயற்திட்டத்தினால் ரூபா 6.98 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.